DEPOSITION OF WITNESS
IN THE COURT OF THE PRINCIPAL DISTRICT & SESSIONS COURT,THENI.
Case No:S.C.No.54/2025
Prosecution Witness P.W.1

Name : **திரு.சங்கிலிராஜா** Caste:

Father's Name :**திரு.** Calling :

Village: Religion :

Taluk : Age:

எதிரிகள் ஆஜர்
**நாள்: 03.02.2026.**
(சாட்சி அழைக்கப்பட்டு சத்தியபிரமாணம் செய்யப்பட்டார் )

**<u>முதல் விசாரணை</u>**

1. நான் 2019 ஆம் ஆண்டு முதல் தமிழ்நாடு வனத்துறையில் வன காவலராக பணிபுரிந்து வருகிறேன். 2023 –ம் ஆண்டு நவம்பர் மாதம் நான் பெரியகுளம் வனச்சரகத்திலிருந்து உத்தமபாளையம் வனச்சரகத்திற்கு பணி மாறுதலாகி சென்றேன். எங்கள் பணியானது வனக்காப்பாளர். உத்தமபாளையம் பகுதியைச் சேர்ந்த சுமார் 1500 ஹெக்டர் பரப்பு கொண்ட வனப்பகுதியை வன பாதுகாப்பு பணியை நாங்கள் மேற்கொண்டு வருவோம். காட்டுப்பகுதியில் ஆக்கிரமிப்புகள் எதுவும் சட்டத்திற்கு புறம்பாக மேற்கொள்ளக் கூடாது என்பது தொடர்பாகவும், வனப்பகுதியில் உள்ள மரங்களை சட்டத்திற்கு புறம்பாக யாரும் வெட்டக்கூடாது என்பது தொடர்பாகவும், அங்கு இருக்கும் வன உயிரினங்களை பாதுகாப்பதற்கும், மற்றும் சட்டத்திற்கு புறம்பாக வேட்டையாடுவதை தடுப்பதற்கும், வன குற்றங்கள் தொடர்பாக நிகழும் வழக்குகளை பார்வையிடுவதும் எங்களுடைய முக்கியமான பணியாகும்.

2. பகல் நேரங்களில் தினமும் நாங்கள் இது சம்பந்தமாக ரோந்து பணி செல்வதுண்டு அதேபோல் வாரத்திற்கு இரண்டு நாட்கள் இரவு நேரங்களில் ரோந்து பணியும் செல்வது உண்டு. நாங்கள் இது சம்பந்தமாக ரோந்து பணி

செல்லும் பொழுது பாக்கெட் டைரி மெயின்டைன் செய்வது உண்டு அது அல்லாமல் எங்கள் அலுவலகத்தில் பராமரிக்கப்படும் பதிவேட்டிலும் நாங்கள் ரோந்து பணி முடித்துவிட்டு வந்து குறித்துக் கொள்வதும் உண்டு.

3. கடந்த 05.09.2024ம் தேதியன்று அன்றைய அன்றைய தினம் இரவு 08.00 மணி அளவில் வழக்கம் போல நாங்கள் இரவு ரோந்து இருக்கு செல்வது உண்டு. எனது பாதுகாப்பு பணிக்கு உட்பட்ட பகுதி என்பது குச்சனூரில் இருந்து சங்கராபுரம் செல்லும் வழியில் புலிக்குத்தி காப்பு நிலம் என்று ஒரு பகுதி உள்ளது. அந்தப் பகுதிக்கு நான் நைட் ரவுண்ட்ஸ் செல்லும்போது குச்சனூர் – சங்கராபுரம் செல்லும் பாதையில் பாலங்கள் அதிகம் இருக்கும் காரணத்தினால் அங்கு ஆட்கள் நடமாட்டம் அதிகமாக இருக்கும் என்பதால் நான் எனது வண்டியை நிறுத்தி விட்டு எனது கையில் வழங்கப்பட்டுள்ள டார்ச் லைட்டை அடித்துக் கொண்டு நான் அந்தப் பகுதியை ஆய்வு மேற்கொண்டேன்.

4. சங்கரா புரத்திலிருந்து இரண்டாவது பாலத்தை நான் தாண்டும்போது சாலையிலிருந்து வலதுபுறம் சுமார் 15 அடி தூரத்தில் யாரோ ஒருவர் கீழே படுத்து கிடப்பது போல் தெரிந்தது போதையில் கிடக்கிறாரா என நினைத்துக் கொண்டு அவ்வாறு படுத்து கிடந்த நபர் அருகில் சென்று பார்த்தபோது அங்கு ஒரு ஆண் நபர் உடல் முழுவதும் ரத்த காயங்களுடன் தலை, தோள்பட்டை ஆகிய இடங்களில் ரத்த காயங்களுடன் அவர் உடலில் வெள்ளை நிறத்தில் ஒரு முண்டா பனியனும், சாம்பல் நிறத்தில் ஒரு வேஷ்டியும் அணிந்து அந்த வேஷ்டியில் மஞ்சள் பார்டர் போட்டு இடதுபுறம் ஒருக்கழித்து அவர் இறந்த நிலையில் கிடந்ததை பார்த்தேன்.

5. என்னிடம் காண்பிக்கக்கூடிய புகைப்படத்தில் இருப்பது போல் தான் அந்த பிரேதம் அந்த சமயத்தில் காயங்களுடன் அந்த இடத்தில் இருந்தது அந்தப் புகைப்படம் அ.சா.ஆ.1. அந்த சமயத்தில் நான் ஒருவர் மட்டுமே ரோந்து பணிக்கு சென்று இருந்தேன் என்பதால் எனது மேல் அதிகாரியான வனவர் பிரின்ஸ் டேனியல் என்பவருக்கு போன் மூலம் நான் தகவல் சொன்னேன். அவர் சுமார் ஒரு அரை மணி நேரத்தில் அந்த இடத்திற்கு வந்தடைந்தார். அவர் அந்த

பிரேதத்தை பார்த்துவிட்டு அந்த நபரை அடையாளம் கண்டு கொண்டு அவர் நேற்றைய தினம் அவர் அந்தப் பகுதியிலில் ரோந்திற்கு சென்றபோது இரண்டு ஆண் நபர்கள் மற்றும் ஒரு பெண் நபருடன் அதே இடத்தில் நின்று கொண்டிருந்ததை தான் பார்த்ததாக என்னிடம் தெரிவித்தார். அந்த நபர் தான் தற்போது காயங்களுடன் இறந்து கிடப்பதாக என்னிடம் தெரிவித்தார்.

6. இது சம்பந்தமாக சின்னமனூர் காவல் நிலையத்திற்கு சென்று முறையாக எழுத்துப்பூர்வமாக புகார் தெரிவித்தோம். நான் கொடுத்த புகார் தான் அ.சா.ஆ.2. காவல் நிலையத்திற்கு நாங்கள் இருவரும் தான் சென்றோம். என்னுடன் வந்த வனவர் அந்த புகாரில் சாட்சி கையெழுத்து எதுவும் போடவில்லை. இறந்த நபர் அணிந்திருந்த உடைகளை பார்த்தால் என்னால் அடையாளம் சொல்ல முடியும் வெள்ளை நிறம் முண்ட பனியன் சா.பொ.1, மற்றும் சாம்பல் நிற மஞ்சள் கலர் பார்டர் போட்ட வேஷ்டி சா.பொ.2. பிரேதம் இருந்த அந்த பகுதியானது அதிக போக்குவரத்து இரவு நேரங்களில் இருக்காது. காவல் நிலையத்தில் என்னை போலீசார் விசாரணை செய்தார்கள். 10.12.2024 ஆம் தேதியன்று எனது வாக்குமூலத்தை வீடியோ மூலமாக ஆய்வாளர் பதிவு செய்தார்.

<u>எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை</u>

1. நான் 10 மாதம் அதே பகுதியில் பணிபுரிந்து தொடர்பான ஆவணங்கள் எதையும் போலீசார் எனது விசாரணையின் போது வாங்கி கொள்ளவில்லை என்றால் சரிதான். எத்தனை முறை நான் அந்த பகுதியில் ஆய்வுக்கு சென்றேன் என்ற விவரத்தையும் போலீசார் விசாரணை நான் குறிப்பிட்டுச் சொல்லவில்லை என்றால் சரிதான். அதே பகுதியில் என்னைப் போலவே எங்கள் அலுவலகத்தைச் சேர்ந்த பல நபர்கள் அந்த பகுதியில் ஆய்வுக்கு செல்வார்கள் என்ற விபரத்தை நான் குறிப்பிட்டுச் சொல்லி உள்ளேனா என்றால் அன்றைய தினம் என்னை தவிர வேறு யாரும் அந்த பகுதியில் ஆய்வுக்கு செல்லவில்லை.

2. பொதுவாக இருசக்கர வாகனத்தில் ரோந்திற்கு செல்லும்போது ஒன்றுக்கு மேற்பட்ட நபர்கள் தான் அந்த பகுதியில் ரோந்து பணிக்கு

செல்வார்கள் என்றால் சரியல்ல, அது அடர்ந்தவனம் கிடையாது. அவ்வாறு அடர்ந்த வனப் பகுதியாக இருந்தால் மட்டுமே ஒன்றுக்கு மேற்பட்ட நபர்கள் ரோந்து பணிக்கு செல்வதுண்டு சாதாரண காட்டுப் பகுதி என்பதால் தனியாக தான் ரோந்து பணிக்கு செல்வோம். சாதாரணமாக வனச்சரகர் அவர்களது கட்டுப்பாட்டிற்கு ஐந்து நபர்கள் தான் ரோந்து பணிக்கு நாங்கள் செல்வது வழக்கம் என்றால் சரியல்ல. ஐந்து நபர்களுக்கு மேலேயும் நாங்கள் ரோந்து பணிக்கு செல்வது உண்டு, தனியாகவும் ரோந்து பணிக்கு நாங்கள் செல்வது உண்டு. அவ்வாறு செல்லும்போது எங்கள் பாதுகாப்புக்காக நாங்கள் பொதுவாக துப்பாக்கி மற்றும் டார்ச் லைட் எடுத்துச் செல்வது வழக்கம் என்றால் சரியல்ல, அடர்ந்த காட்டுப் பகுதிக்கு சென்றால் மட்டுமே அவ்வாறு எடுத்துச் செல்வோம் சாதாரண வனப்பகுதிக்கு செல்லும்போது டார்ச் லைட் மட்டுமே எடுத்துச் செல்வது வழக்கம்.

3. நான் வழக்குக்காக பொய்யாக குறிப்பிடுகிறேன் என்றும், துப்பாக்கியுடன் தான் எப்போதும் ரோந்து பணிக்கு செல்வோம் என்றால் சரியல்ல பொதுவாக ரோந்து பணிக்கு செல்ல முற்படும்பொழுது எங்கள் அலுவலகத்தில் உள்ள டைரியில் எங்கு செல்கிறேன் உடன் எந்த ஆயுதம் எடுத்துச் செல்கிறேன் என்ற விபரத்தை குறிப்பிட்டு செல்வதுண்டு என்றால் சரியல்ல டைரியில் கையெழுத்து மட்டுமே போடுவோம் என்ன உபகரணங்கள் எடுத்துச் செல்கிறோம் என்ற விவரத்தை குறிப்பிட மாட்டோம். அவ்வாறு கையெழுத்து போட்ட ஆவணங்கள் எதையும் போலீஸ் விசாரணையில் நான் ஒப்படைக்கவில்லை என்றால் சரிதான். உண்மையிலேயே நான் அன்றைய தினம் பணியில் இருந்திருந்தால் அது பற்றிய ஆவணங்களை ஆய்வாளர் என்னை விசாரிக்கும் போது கொடுத்திருப்பேன் என்றால் சரியல்ல.

4. எனது அலுவலகத்தில் இருந்து சம்பவ இடமானது சுமார் 15 கிலோமீட்டர் தூரம் இருக்கும். எனது அலுவலகத்தில் இருந்து அன்றைய தினம் இரவு எத்தனை மணிக்கு நான் கிளம்பினேன் என்றால் இரவு 07.15 மணிக்கு கிளம்பினேன் அவ்வாறு வரும் பொழுது எல்லா இடங்களிலும் நின்று பார்த்து

வனஅத்துமீறல்கள் நிகழ்கிறதா என்று பார்த்து வருவது வழக்கம் என்றால் சரியல்ல. ஒவ்வொரு நாளைக்கும் நாங்கள் ஒவ்வொரு பகுதியை குறித்து வைத்திருப்போம். அந்த இடங்களில் தான் அதிகமாக நாங்கள் பார்ப்போம். நான் அந்த இடத்திற்கு 15 கிலோமீட்டர் கடந்து வரும் பட்சத்தில் சுமார் 2 1/2 மணி நேரம் ஆகும் என்றால் சரியல்ல.

5. எனது அலுவலகம் கோம்பையில் அமைந்துள்ளது. அங்கிருந்து சங்கராபுரம் பகுதிக்கு வர வேண்டும் என்றால் 15 கிலோ மீட்டர் வரவேண்டும். அதிகபட்சம் 45.00 நிமிடத்தில் வர முடியும். நான் இருசக்கர வாகனத்தில் வரும் போது எல்லா இடத்தையும் ஆய்வு செய்துவிட்டு காலதாமதத்துடன் இரண்டு மணிக்கு தான் வந்திருக்க முடியும் என்றால் சரியல்ல. அன்றைய தினம் புலிக்குத்திற்கு தான் ஆய்வுக்கு செல்கிறேன் என்ற விவரத்தை காலையிலேயே நாங்கள் அலுவலகத்தில் தீர்மானித்து வைத்திருந்ததால் நேராக புலிக்குத்திக்கு நான் வந்து விட்டேன்.

6. நான் கிழக்கிலிருந்து மேற்கு நோக்கிசென்றேன். அவ்வாறு எனது புகாரில் குறிப்பிட்டுச் சொல்லவில்லை என்றால் சரிதான். குச்சனூரிலிருந்து சங்கராபுரம் சென்ற விவரத்தை சொல்லி உள்ளேன், அந்த திசையானது கிழக்கிலிருந்து மேற்கு நோக்கி செல்லும் பகுதி தான். அந்த இடத்திற்கு செல்லும் பகுதியானது மின்விளக்கு அற்ற பகுதி என்றால் சரிதான். மேலிருந்து கீழே வரும்போது இறக்கமான பகுதி என்றும், கீழிருந்து மேலே வரும்போது மேடான பகுதி என்றால் சரிதான்.

7. சம்பவ இடமானது புதர் மண்டிய ஒரு முள் காடு என்றால் சாலையில் இருந்து பிரேதம் இருந்த இடம் சுமார் 12 அடி தூரத்தில் அமைந்துள்ளது. அந்தப் பகுதியில் அதிகமாக முட்புதர் இல்லை. காட்டுப்பகுதிக்குள் என்ன உள்ளது என்ற விபரத்தை முட்புதர் இருந்ததால் அறுதியிட்டு சொல்ல முடியாது என்றும் 15 அடி தூரம் இருந்தாலும் அவ்வாறு சொல்ல முடியாது என்றால் சரியல்ல சாலையில் இருந்து யார் கடந்து சென்றாலும் அந்த பிரேதம் இருந்த இடத்தை பார்த்தால் சொல்ல முடியும், அந்த அளவுக்கு தான் பிரேதம் இருந்தது. அதே

வழியில் போடி வரைக்கும் வாகனங்கள் செல்லக்கூடிய சாலை என்பதால் அதிக வாகனம் போக்குவரத்து இருக்கும் என்றால் 1–2 வாகனங்கள் அந்த வழியாக செல்லும். அவ்வாறு வாகனங்கள் முகப்பு வெளிச்சத்தில் பிரேதம் இருந்த இடம் ரோட்டிலிருந்து பார்த்தால் தெரியக்கூடிய அளவில் இருந்ததா என்றால் முகப்பு விளக்கில் கண்டிப்பாக பிரேதம் இருந்த இடம் தெரியாது.

8. நான் ரோட்டில் இருந்து பார்த்த பொழுது அந்த நபர் இறந்திருந்தாரா உயிருடன் இருந்தாரா என்று அறுதியிட்டு சொல்ல முடியாது என்றால் நான் பக்கத்தில் சென்று பார்த்தபோது அவர் அவர் இறந்திருந்த விபரம் தெரிந்து கொண்டேன். நான் சொன்ன இடம் அதிக வனவிலங்குகள் நடமாட்டம் உள்ள பகுதி என்றால் சரியல்ல, அது காப்பு நிலம் மட்டுமே வனவிலங்குகள் அங்கு அதிகம் கிடையாது. நான் வழக்குக்காக பொய்யாக குறிப்பிடுகிறேன் என்றும், அது வனப்பகுதி என்பதால் காட்டு மாடுகள் மற்றும் காட்டு மான்கள் அதிகம் இருக்கும் என்றால் அந்தப் பகுதியில் முயல், கேழையாடு, சருகுமான், கீரிப்பிள்ளை மற்றும் காட்டுப்பன்றி ஆகியவை மட்டுமே இருக்கும். அது சம்பந்தமான ஆவணம் நான் போலீசாரிடம் ஏதேனும் கொடுத்துள்ளேனா என்றால் எங்கள் அலுவலகத்தில் இது சம்பந்தமான ஆவணங்கள் உள்ளது.

9. அந்த பகுதியில் தொழுமாடுகள் மேற்பதற்கு ஆட்கள் வருவார்கள் என்றால் சரியல்ல, அந்தப் பகுதியில் மாடுகள் மேய்ப்பதற்கு ஆட்கள் வர மாட்டார்கள். அந்த கிராமப் பகுதியில் தொழு மாடுகள் அதிகமாக 10 கிராமங்களில் இருந்தும் வந்து மேய்ப்பார்கள் என்றால் சரியல்ல. அந்த காப்பு பகுதியில் தொழுமாடுகள் மேய்ப்பது கிடையாது. அந்த வன நிலத்தை ஒட்டி பட்டா நிலங்கள் தோப்புகள் உள்ளது என்றால் சரிதான். அங்கு வேலை ஆட்கள் வேலை செய்து கொண்டிருப்பார்கள். இரவு நேரங்களில் தோட்டத்தை காவல் காப்பார்கள் என்றால் சரிதான்.

10. அரை நிர்வாணமாக ஒரு நபர் இருக்கும் பொழுது வனவிலங்குகள் மிரண்டு தாக்குதல் ஏற்பட வாய்ப்புண்டு என்றும், அதனால் அவருக்கு மரணம் ஏற்பட்டுள்ளது என்றும், வழக்கிற்காக போலிசார் கேட்டுக்கொண்டதற்கிணங்க

நான் பொய்யாக குறிப்பிடுகிறேன் என்றால் சரியல்ல. அந்தப் பகுதியில் உள்ள விலங்குகள் சிறிய விலங்குகள் மட்டுமே அவை ஆக்ரோசமாக மனிதர்களை தாக்கும் தன்மை கிடையாது என்றால் சரிதான். கேழையாடு மற்றும் பன்றி மனிதர்களை தாக்கும் தன்மை கொண்டது என்றால் சரியல்ல. காட்டுப்பன்றி குட்டியுடன் இருந்தால் மட்டுமே அதற்கு ஆபத்து நேர்ந்தால் தாக்கும் தன்மை கொண்டது.

11. எனது மேலதிகாரிக்கு நான் 8.15 மணிக்கு தகவல் கொடுத்தேன். நான் அவ்வாறு அவரை அழைக்கும்போது அவரது வனக்காவல் அலுவலகத்திலிருந்து தான் அவர் என்னிடம் பேசினார். நான் காவல் நிலையத்திற்கு போன் மூலம் புகார் எதுவும் நான் அளிக்கவில்லை.நான் பொதுவாக ஒரு பிரேதம் காட்டுப்பகுதியில் இருக்கும் பட்சத்தில் எனது உயர் அதிகாரிக்கு தகவல் தெரிவிப்பது போலவே 100 எண்ணிற்கும் போலீசாருக்கு அழைத்து தகவல் சொல்லி இருப்பேன் என்றால் சரியல்ல. எனது மேலதிகாரி சுமார் அரை மணி நேரத்தில் அங்கு வந்தார். சம்பவயிடத்திற்கு எனது மேலதிகாரி வந்த பிறகு சுமார் அரை மணி நேரம் நாங்கள் அங்கு இருந்தோம்.

12. எனது மேலதிகாரி அந்த பகுதியில் முதல்நாள் வந்து பார்த்தபோது அதே இறந்து போன நபர் அந்த இடத்தில் இரண்டு ஆண் நபர்கள் மற்றும் ஒரு பெண் நபருடன் இருந்ததை பார்த்ததாக என்னிடம் சொன்ன விபரத்தை நான் புகாரில் குறிப்பிட்டுச் சொல்லவில்லை என்றால் சரிதான். நான் காவல் நிலையத்திற்கு இரவு 9.15 மணிக்கு சென்றேன். புகாரை காவல் நிலையத்தில் வைத்து நான் எழுதினேன். எனது மேலதிகாரியின் முத்திரை எதுவும் பதித்து புகார் தெரிவிக்கவில்லை., போலீசார் சொல்ல சொல்ல புகார் எழுதவில்லை, நானாகத்தான் புகார் எழுதினேன்.

13. நான் புகாரை எழுதி ஆய்வாளரை பார்த்து சொல்லிவிட்டு தான் வந்தேன். மறுநாள் காலை வரை காவல் நிலையத்தில் தான் நாங்கள் இருந்தோம். ஆய்வாளர் என்னை வழக்கு தொடர்பாக எப்பொழுது விசாரித்தார் என்றால் 6-ம் தேதி என்னை விசாரணை செய்தார். சம்பவம் நடந்த அன்றைய தினம்

ஆய்வாளர் என்னை விசாரணை செய்யவில்லை என்றால் சரிதான். பிரேதம் எந்த திசையில் திரும்பி கிடந்தது என்ற விவரத்தை நான் குறிப்பிட்டு புகாரில் சொல்லவில்லை என்றால் சரிதான். நான் எனது வாகனத்தை நிறுத்தி விட்டு நான் டார்ச் லைட் அடித்து அந்த இடங்களில் பார்வையிட்டேன் என்ற விபரத்தையும் புகாரில் குறிப்பிட்டுச் சொல்லவில்லை என்றால் சரியல்ல, சொல்லி உள்ளேன். போலிஸ் விசாரணையிலும் நான் இது பற்றிய விபரங்களை சொல்லியுள்ளேன்.

14. நான் அந்த தேதியில் எந்த பணியிலும் இல்லை என்றும், அரசு அதிகாரி என்பதால் நான் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. நான் பார்த்த நபர் எப்போது, எப்படி யாரால் தாக்கப்பட்டு இறந்தார் என்ற விவரம் எனக்கு தெரியாது என்றால் சரிதான். சம்பவயிடத்தில் கத்தியோ, ஆயுதங்களோ நான் பார்க்கவில்லை என்றால் சரிதான். நான் பார்த்தபோது சம்பவயிடத்தில் இறந்தவர் உடலில் ரத்தம் உறைந்து இருந்தது என்றால் சரிதான். அவரது காலனியோ, செல்போனோ நான் அந்த இடத்தில் எதுவும் பார்க்கவில்லை. நான் சொன்ன மாதிரி, சொன்ன இடத்தில் எந்த பணிக்கும் செல்லவில்லை என்றும், சம்பவ இடத்திற்கு செல்லவில்லை என்றால் சரியல்ல.

**<u>மறுவிசாரணை – இல்லை</u>**

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்லச் சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்கு படித்துக் காட்டப்பட்டு, அவரால் சரி என ஒப்புக்கொள்ளப்பட்டு என் முன்னால் சாட்சியால் கையொப்பமிடப்பட்டது.

SWARNAM J NATARAJAN

Digitally signed by SWARNAM J NATARAJAN
Date: 2026.02.03 18:36:49 +0530

முதன்மை மாவட்ட அமர்வு நீதிபதி,
தேனி.